# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.

**Special Sessions Case No.21/2023**

Prosecution Witness : **PW10**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **விஜயனாந்தன்** | **Father's Name** | : |
| **Village** | : | **Taluku** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 13th day of November 2025.

**(7 ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்படுத்தப்பட்டார். 9 ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜரில்லை. அவர் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார். குவிமுச. 317 தாக்கல் செய்து அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்ட்டுள்ளது. )**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரவக்குறிச்சி வட்டம், தெ.வெங்கடாபுரத்தில் கிராமநிர்வாக அலுவலராக பணிபுரிகிறனே். கடந்த 23.12.2020 ஆம் தேதியன்று புகளுர் வட்டம், புஞ்சை புகளூர் வடக்கு கிராம நிர்வாக அலுவலராக இருந்தபோது சுமார் மதியம் 12.30 மணிக்கு வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் இருந்து குற்ற எண்.778/2020 என்ற வழக்கில் எதிரியை கைது செய்து வைத்திருப்பதாகவும்,

எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற இருப்பதால் அதற்கு சாட்சியாக என்னையும் எனது உதவியாளர் தனலட்சமியையும் சாடசியாக இருக்கும்படி அழைத்தார்கள். நாங்கள் கிளம்பி வேலாயுதம்பாளையத்தில் உள்ள பேருந்து நிறுத்தத்திற்கு சென்றேன். அங்கு இருவரை கைது செய்து வைத்திருந்தார்கள். அதில் மணிகண்டன் என்பவர் ஒருவரும், சீனிவாசன் ஒருவரையும் காவல்துறையினர் அறிமுகம் செய்து வைத்தார்கள். ஆஜர் எதிரி தான் மணிகண்டன். (ஆஜர் எதிரியை சரியாக சாட்சி அடையாளம் காண்பித்தார்.) ஆஜர் எதிரி மணிகண்டன் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆஜர் எதிரி மணிகண்டன் 16.12.2020 ஆம் தேதியன்று அவரது நண்பர் கலையரசன், சேக்தாவுத், பிரசாந்த், பிரசாத் ஆகியோர் சேர்ந்து வேலாயுதம்பாளையம் பைபாஸ் பெட்ரோல் பங்கிற்கு எதிரில் உள்ள ஹலோபிளாக்ஸ் இடத்தில் மது அருந்தி கொண்டிருந்தபோது இறந்துபோன ரஞ்சித்குமார் கொலைசெய்ய வேண்டும் என திட்டம் தீட்டி மறுநாள் 17.12.2020 ஆம் தேதியன்று மாலை 4.00 மணிளவில் கலையரசன், சேக்தாவுத், கோகுல்நாத், பிரசாத், பிரசாந்த், மணிகண்டன், சீனிவாசன், சூர்யா ஆகிய அனைவரும் சேர்ந்து வேலாயுதம்பாளையம் மூலிமங்கலம் அருகேயுள்ள 91 காபி கடை அருகே ரஞ்சித்குமாரை வழிமறித்து முதலில் கலையரசன் இறந்துபோன ரஞ்சித்திடம் தகராறு செய்ததாகவும், அப்போது சூர்யா கையில் வைத்துக்கொண்டு ரஞ்சித்குமாரை வெட்டியதாகவும், ரஞ்சித் தப்பி ஓடியபோத மணிகண்டன் காலை தட்டிவிட்டு கீழே ரஞ்சித் விழுந்தவுடன் சீனிவாசன் ரஞ்சித்தை வெட்டியுள்ளார். சூர்யாவிடமிருந்து கத்தியை கலையரசன் வாங்கி ரஞ்சித்தை வெட்டினார்கள் என்றும் கலையரசனிடமிருநத கத்தியை வாங்கி மணிகண்டன் வெட்டியதாக கூறினார்கள். அங்கு உயிர்போகும் வரை காத்திருந்து உயிர் போனவுடன் நானப்பரப்பு ஊர் வழியாக மூர்த்திப்பாளையம் 7 கன்னிமார் கோவில் அருகில்

உள்ள புதரில் கத்திகளை போட்டுவிட்டு நேராக கரூர் சென்றதாக கூறினார்கள். அமராவதி ஆற்றில் ரத்தக்கரைபடிந்த சட்டைகளை போட்டுவிட்டு வேறு சட்டைகள் அணிந்ததாக மணிகண்டன் வாக்குமூலம் அளித்தார். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்படாத பகுதிகளை கூறுவதால் எதிரிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.)** மணிகண்டன் அளித்த வாக்குமூலத்தை தட்டச்சு செய்து அதை பிரிண்ட் எடுத்து அதில் நானும், என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். ஆஜர் எதிரியும் அதில் கையொப்பம் செய்தோம். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரியின் கையொப்பம் இது தான். அது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பிறகு தன்னை அழைத்துச்சென்றால் ஆயுதங்களை மறைத்து வைத்த இடத்தை காண்பிப்பதாக மணிகண்டன் கூறினார். அதன் பிறகு நாங்கள் அனைவரும் மூர்த்திபாளையம் பிரிவு, 7 கன்னிமார்கள் கோவில் அருகில் உள்ள முட்புதருக்கு எதிரி அழைத்துச்சென்று அந்த புதரில் இருந்து ஆஜர் எதிரி மணிகண்டன் மறைத்து வைத்திருந்த கருப்பு சிவப்பு பிடிப்போட்ட கத்தியை எடுத்துக்கொடுத்தார். அந்த கத்தி இதுதான். அது அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பிறகு காவல்துறையினர் ஒரு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார்கள். **கைப்பற்றுதல் மகஜரில் நான் கையொப்பம் செய்துள்ளேன். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது இதுதான். அது அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் மற்றொரு எதிரியான சீனிவாசன் மற்றொரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதனை ஆய்வாளர் பதிவு செய்தார். எதிரி சீனிவாசனும் அதில் கையொப்பம்

செய்தார். **அதில் நானும் என் உதவியாளரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவது கையொப்பம் என்னுடையது தான் அது அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி சீனிவாசனும், ஆஜர் எதிரி மணிகண்டனும் தான் 7 கன்னிமார்கள் கோவிலுக்கு அழைத்துச்சென்றார்கள். **7 கன்னிமார்கள் கோவில் அருகில் உள்ள முட்புதரிலிருந்து சிவப்பு கருப்பு பிடிபோட்ட மற்றொரு கத்தியை எடுத்து ஆஜர் செய்தார். அந்த கத்தி இதுதான். அது அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பிறகு காவல்துறையினர் ஒரு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார்கள். **கைப்பற்றுதல் மகஜரில் நான் கையொப்பம் செய்துள்ளேன். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது இதுதான். அது அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சீனிவாசன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன்பிறகு 18.02.2021 ஆம் தேதியன்று நான் பணியிலிருந்த போது வேலாயுதம் பாளையம் காவல்நிலையத்திலிருந்த இதே வழக்கு சம்மந்தமாக உதயநிதி என்ற சூர்யாவை நீதிமன்ற காவலிலிருந்து அழைத்து வந்து காவல்நிலையத்தில் காவலில் இருக்கும்போது உதயநிதி என்ற சூர்யா தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதில் நானும் என் உதவியாளரும், சாட்சியாக கையொப்பம் செய்தோம். உதயநிதி என்ற சூர்யாவும் அதில் கையொப்பம் செய்தார். **என்னுடைய கையொப்பம் இது தான் அது அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** உதயநிதி என்ற சூர்யா எங்களையும் காவல்துறையினரையும் 7 கன்னிமார் கோவிலுக்கு அழைத்துச்சென்றார்கள். **7 கன்னிமார்கள் கோவில் அருகில் உள்ள முட்புதரிலிருந்து சூரிக்கத்தியை எடுத்து ஆஜர் செய்தார். அந்த கத்தி இதுதான். அது அ.சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பிறகு**

**காவல்துறையினர் ஒரு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார்கள். கைப்பற்றுதல் மகஜரில் நான் கையொப்பம் செய்துள்ளேன். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது இதுதான். அது அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. உதயநிதி என்ற சூர்யா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சி பிறகு அ.சா.பொ.3 யை சூர்யா எடுத்து ஆஜர் செய்ததாக என்று ஞாபகமில்லை என்று கூறுகிறார். நான் இதற்கு முன்பு இந்த தாய் வழக்கில் அடையாளம் காண்பித்தேன் தற்போது ஞாபகமில்லை. 18.12.2020 ஆம் தேதியன்று காலை 5.45 மணியளவில் காவல்துறையினர் அதற்கு முந்தைய நாள் நடந்த கொலை வழக்கு சம்மந்தமாக சம்பவ இடமான வேலாயுதம் பாளையம் பைபாஸ் அருகில் உள்ள 91 கபே அருகில் நானும் என் உதவியாளரும் சென்றோம். அங்கு ஆய்வாளர் சம்பவ இடத்திலிருந்த ரத்தம் படிந்த மண், ரத்தம் படியாத மண், உட்லேண்ட் செப்பல் ஒரு ஜோடி, விகேசி செப்பல் ஜோடி, தங்க செயின் ஒன்று, பல்சர் பைக் ஒன்று ஆகியவற்றை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார். அதில் நானும் என் உதவியாளரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவ இடத்திலிருந்து ரத்தம் படிந்த மண் இது தான் அது அ.சா.பொ.4, ரத்தம் படியாத மண் இது தான் அது அ.சா.பொ.5, உட்லேண்ட் செப்பல் ஒரு ஜோடி இது தான் அது அ.சா.பொ.6, விகேசி செப்பல் ஒரு ஜோடி இது தான் அது அ.சா.பொ.7, தங்க செயினின் புகைப்படம் இது தான் அது அ.சா.பொ.8, பல்சர் பைக்கின் புகைப்படம் இது தான் அது அ.சா.பொ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும்

ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தார். அந்த பார்வை மகஜரில் நானும் என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். **பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான் அது அ.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>7 மற்றும் 9 ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்த இடம் என் கிராம எல்லைக்குட்பட்ட பகுதியாகும். உங்கள் எல்லைக்குட்பட்ட பகுதியில் கொலையோ தற்கொலையோ நடந்தால் உங்களுக்கு கிடைத்த தகவலை எழுதி அந்த இடத்தை பார்வையிட்டு பிரேதத்தை அடையாளம் கண்டு அறிக்கை தயார் செய்து அதனை நீதிமன்றத்ததிற்கும் காவல்நிலையத்திற்கும் உங்கள் மேலதிகாரிக்கும் அனுப்ப வேண்டும் என கிராம நிர்வாக அலுவலரின் வருவாய் கையேட்டில் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சம்பவ நடந்த தினமான 17.12.2020 அன்று மாலை 5.30 மணிக்கு சென்றேன். எனது அலுவலகத்திற்கும் காவல்நிலையத்திற்கும் சமார் முக்கால் கிலோமீட்டர் தொலைவு இருக்கும். காவல்நிலையத்தை சுற்றிலும் வீடுகள் கடைகள் வேலையாகிகொண்டிருந்து என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்த பகுதியும் ஆட்கள் நடமாடும் பகுதி என்றும் அருகில் கடைகள் இருந்தது என்று சொன்னால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு 5.30 மணிக்கு சென்ற போது காவல்நிலையத்தினர் யாரும் இல்லை. நான் 5.30 மணிக்கு சென்ற போது தங்க செயின் சம்பவ இடத்திலிருந்ததை நான் பார்க்கவில்லை. பைக்கை பார்த்தேன். விகேசி செப்பலை பார்த்தேன். நீங்கள் எந்த பொருளையும் பார்க்கவும் இல்லை என்றும் வழக்கிற்காக

பின்னிட்டு காவல்நிலையத்தில் தயார் செய்யப்பட்ட வரைபடம், பார்வை மகஜர், கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றில் நீங்கள் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. காவல் துறையினர் இந்த வழக்கு குறித்து என்னை 4 முறை விசாரித்தார்கள். 23.12.2020 ஆம் தேதியன்று ஆஜர் எதிரி மற்றும் சீனிவாசனை கைது செய்து வைத்த போது அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மணி என்ற கூல்மணி மற்றும் சீனிவாசன் ஆகிய இருவரும் அவர்கள் இடுப்பிலிருந்த கத்தியைத்தான் எடுத்து ஆஜர் செய்துள்ளார்கள் என்று காவல்துறை விசாரணையில் கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் ஞாபகமில்லை. 23.12.2020 ல் ஆஜர் எதிரி மணிகண்டன், மற்றொரு எதிரி சீனிவாசன் அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 7 கன்னிமார் கோவிலுக்கு அருகில் உள்ள முட்புதரிலிருந்து சான்று பொருட்களை கைப்பற்றியதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. 7 கன்னிமார்கள் கோவில் இருக்கும் இடத்திற்கு தனிகிராமநிர்வாக அலுவலர் உண்டு. 7 கன்னிமார்கள் கோவில் இருக்கும் பகுதிக்கு அருகில் ரயில்வே தண்டவாளம் உள்ளது என்று சொன்னால் சரிதான். ரயில்வே தண்டவாளத்திற்கு இருபுறமும் விவசாய நிலம் உள்ளது என்று சொன்னால் சரிதான் அங்கு எப்போதும் ஆட்கள் வேலை செய்வார்கள் என்று சொன்னால் சரியல்ல. 7 கன்னிமார்கள் கோவில் இருக்கும் இடம் ரயில்வேக்கு சொந்தமான இடமா, தனியாருக்கு சொந்தமான இடமா, அரசுக்கு சொந்தமான இடமா என்று தெரியாது. 9 ம் எதிரி உதயநிதியிடமிருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லைஎன்றும் அதன் அடிப்படையில் எந்த ஒரு பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள சான்று பொருட்கள் சான்றாவணங்கள் அனைத்தும் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும் அதில் நீங்கள்

கையொப்பம் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 9 ஆம் எதிரி கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தில் மூலம் கைப்பற்றிய சான்று பொருட்கள் கைப்பற்றிய போது எனது உதவியாளர் தனலட்சுமியும் உடன் இருந்தார். நானும் தனலட்சுமியும் ஜீப்பில் சென்றார். நீங்கள் ஜீப் நிறுத்திய இடத்திற்கும் முட்புதருக்கும் எவ்வளவு தொலைவு தூரம் இருக்கும் என்றால் நினைவில்லை. முட்புதருக்கு செல்லும் வழியில் யார் வேண்டுமானாலும் சென்றுவரலாம் அது நடைபாதை. முட்புதரில் எந்தவொரு அடைப்பும் இல்லாமல் திறந்தவெளி என்று சொன்னால் சரிதான். அ.சா.பொ. 2 மற்றும் அ.சா.பொ.3 கத்திகளின் நீளம் மற்றும் அகலம் என்ன என்று சொல்லமுடியாது. நீங்கள் காவல்துறையினர் சொல்லிக்கொடுத்ததன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி**

முட்புதர் தரையை ஒட்டி சுமார் 10 அடி சுற்றளவில் சுற்றியிருந்தது.

ஒம்./-**K.H.**இளவழகன்,
மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

**Special Sessions Case No.21/2023**

Prosecution Witness : **PW11**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **பாலமுருகன்** | **Father's Name** | : |
| **Village** | : | **Taluku** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 13th day of November 2025.

**(7 ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி ஆஜர்படுத்தப்பட்டார். 9 ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆஜரில்லை. அவர் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார். குவிமுச. 317 தாக்கல் செய்து அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்ட்டுள்ளது. )**

**முதல் விசாரணை**

நான் வெங்கமேட்டில் உள்ள A1 Fuels பெட்ரோல் பங்கு என்ற பெயரில் பெட்ரோல் பங்கு நடத்தி வருகிறேன். டிசம்பர் 2020 அன்று வேலாயுதம்பாளையம் காவல்நிலைய ஆய்வாளரும் மற்றொரு நபரும் வந்து ஒரு கொலை வழக்கு சம்மந்தமாக பெட்ரோல் பங்கிலிருந்த சிசிடிவி புட்டேஜ் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். மேலும் வழக்கு சம்மந்தமான பதிவுகளை ஒரு பென்டிரைவில் பதிவு செய்துகொள்கிறோம் என்று கேட்டார்கள். ஆய்வாளர் 4 சிசிடிவி கேமராவில் பதிவான காட்சிகளை ஒரு பென்டிரைவில் காப்பி செய்து

கொண்டார். சிசிடிவி புட்டேஜ் காட்சிகள் திரையிடப்பட்டு சாட்சி முழுமையாக பார்த்து சாட்சியம் அளித்தார். சாட்சியிடம் பென்டிரைவில் பின்வரும் போல்டரில் இருந்த விடியோக்கள் திரையிடப்பட்டு காண்பிக்கப்பட்டது. (A02_20201217165200.mp4,A03_20201217165200.mp4,A05_20201217165200.mp4, A08_20201217165200.mp4) சிசிடிவி புட்டேஜ்கள் பதிவு செய்யப்பட்ட பென்டிரைவிலிருந்து இன்று தாய்வழக்கிலிருந்து தனியாக காப்பி செய்யப்பட்டது. அது அ.சா.ஆ.19 ஆக ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. (இரண்டாம் தர சாட்சியமாக இருப்பதால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.) இது சம்மந்தமாக காவல்துறையினர் விசாரித்தார்கள்.

**7, 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

பெட்ரோல் பங்கு உரிமம் என் பெயரில் தான் உள்ளது. பெட்ரோல் பங்க் உங்கள் பெயரில் தான் உள்ளது என ஆவணங்களை காவல்துறையினர் கேட்டார்களா என்றால் காவல்துறையினர் இது குறித்து என்னை விசாரித்தார்கள். சிசிடிவி மற்றும் அதற்குள்ள உபகரணங்கள் அனைத்தும் 2017 ஆம் ஆண்டு வைக்கப்பட்டதாகும். சிசிடிவி மற்றும் அதற்குள்ள உபகரணங்கள் அனைத்தும் இந்தியன் ஆயில் கார்ப்பரேசனால் வாங்கி கொடுக்கப்பட்டதாகும். அதனை ஒப்பந்ததார்கள் பொருத்திக்கொடுத்தது கொடுத்தார்கள். அதன்பிறகு நாங்களே நேரடியாக சிசிடிவி பராமரிப்பை செய்து கொண்டோம். சிசிடிவிகான சர்வீஸ் கரூரிலுள்ள நபர்களை வைத்து செய்து கொள்வோம். சிசிடிவி கேமராக்கள் பெட்ரோல் பங்கில் 11 இடத்தில் பொறுத்தப்பட்டுள்ளது. சிசிடிவி கேமராவிலிருந்த டிவிஆருக்கும், டிவிஆரிலிருந்து மானிட்டருக்கும் கனெக்ட்டாகி இருக்கும். டிவிஆரில் ஹார்ட்டிஸ்க் உள்ளது என்று சொன்னால் சரிதான். காவல்துறையினர்

வந்தபோது சிசிடிவி இயக்குவதற்கான ஆட்கள் எங்கள் பங்கில் அன்றைய தினம் இல்லை. டிவிஆர் எந்த நிறுவனத்தால் தயார் செய்யப்பட்டது அதன் மாடல் குறித்த விவரங்கள் எனக்கு தெரியாது. ஒவ்வொரு மாடலிலும் எவ்வாறு காப்பி செய்ய வேண்டும் என்று வித்தியாசமான முறை உள்ளது என்று உங்களுக்கு தெரியும் என்று சொன்னால் தெரியாது. எங்கள் டிவிஆரில் பென்டிரைவ் போட்டு காப்பி செய்யும் வசதிதான் உள்ளது. சிடி போட்டு காப்பி செய்யும் வசதி இல்லை. சிடி எங்கு காப்பி செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் சிசிடிவி வீடியோ காப்பி செய்ததற்கு சான்றிதழ் எதுவும் தரவில்லை. என் முன்பு கைப்பற்றியதற்காக நான் அத்தாட்சி செய்யவில்லை. காவல்துறையினர் தேதி குறிப்பிடவில்லை என்று சொன்னால் தேதி குறிப்பிடவில்லை. வேலாயுதம்பாளையம் ரோட்டிலிருந்து வெங்கமேடு செல்லும் ரோட்டில் பல பங்குகள், ஹோட்டல்கள், கடைகள் உள்ளது என்று சொன்னால் அந்த சமயத்தில் வேலாயுதம்பாளையம் லாரி அசோசியேசன்ஸ்சின் ஒரே ஒரு பெட்ரோல் பங்கு தான் இருந்தது. நானப்பரப்பு, செம்மடை ஆகிய பெட்ரோல் பங்குகள் நான் இருக்கும் சாலைக்கு எதிர்புறத்தில் தான் உள்ளது. உங்கள் பெட்ரோல் பங்கிலிருந்து வேலாயுதம் பாளையம் 15 கிலோமீட்டருக்கு மேலே இருக்கும் என்று சொன்னால் சரிதான். எங்கள் பெட்ரோல் பங்கிலிருந்து ஆய்வாளர் ஹார்ட்டிஸ்க் கைப்பற்றவில்லை. நீங்கள் கூறியது போல் காவல்துறையினர் எந்த சிசிடிவி புட்டேஜ்–ம் பென்டிரைவும், சிடியும் உங்கள் முன்னிலையில் பதிவிறக்கம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்./-**K.H.**இளவழகன்,
மாவட்ட நீதிபதி,
கரூர்.